## பன்னிரெண்டாம் வகுப்பு

## வணிகவியல் --------- ஒரு மதிப்பெண் வினா - விடை.

1. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனிவணிகருக்கு ஏற்றதல்ல ----- **நெகிழ்ச்சித் தன்மையற்றது.**
2. தனி உரிமையாளரின் பயன் --------- **வரையறு முதல்.**
3. கூட்டாண்மை உடன்படிக்கை --------- **முத்திரைத் தாளில் எழுத்து வடிவில் இருக்க வேண்டும்.**
4. கூட்டாண்மை பதிவு ------- **விருப்பத்தின் பேரில் / கட்டாயம் இல்லை.**
5. கூட்டுப் பங்கு நிறுமத்தின் பதிவு --------**கட்டாயம்.**
6. கூட்டுறவு அமைப்பில் -------- **ஒரு நபர் ஒரு வாக்கு முறை கடைபிடிக்கப்படுகிறது.**
7. ஒரு பன்னாட்டு நிறுமம் என்பது --------- **உலக அளவில் பெரியது.**
8. ஒரு குடும்பத்தில் பிறப்பின் மூலம் உறுப்புமை ஏற்படுவது --------- **இந்து கூட்டு குடும்பம்.**
9. கூட்டாண்மை ஏற்படுவது ------------- **வெளிப்படுத்திய உடன்படிக்கையின்படி.**
10. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது ---------- **ஒப்பந்தத்தால்.**
11. கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படுவது ---------- **நகர்புறங்களிலும் , கிராமப்புறங்களிலும்.**
12. மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது ---------- **மாவட்டத் தலைநகரங்களில்.**
13. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகந்த தொழில்முறை அமைப்பு -------- **துறைமுறை அமைப்பு.**
14. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாக கருதப்படும் வடிவமைப்பு ---------- **பொதுக்கழகம்.**
15. வேலைப் பகிர்வு முறை என்பது **துறைப்படுத்துதல்.**
16. ஒப்படைவு என்பது **ஒப்படைத்தல்** என்பதாகும்
17. ஒரு நிறுமம் என்பது **புனைவு நபர்(** ராக)கருதப்படுகிறது.
18. கூட்டுறவு சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் **சமம்.**
19. தொலைதூர ஒலிபரப்பு **துறைமுறை** அமப்பின்கீழ் வருகிறது.
20. பொதுக்கூட்டுருவை **சட்டமுறை நிறுமம்** எனக் கூறலாம்.
21. தமிழ்நாடு மின்சார வாரியம் **வாரிய அமைப்பு** க்கு எடுத்துக்காட்டாகும்.
22. அரசாங்கத்தின் கொள்கைகள் **பன்னாட்டு நிறுமத்திற்கு** சாதகமாக உள்ளது.
23. அரசு நிறுமத்தில் ஊழியர் **அரசு ஊழியர்** அல்லர்.
24. தனியாள் வணிகம் துவங்க -------- **ஒரு நபர் மட்டும் தேவை.**
25. தனியாள் வணிகரின் பொறுப்பு -------- **வரையறையில்லாதது / வரையறா பொறுப்பு.**
26. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்றத் தொழில்கள் ---------- **சிற்றளவு வியாபாரம்.**
27. தனியாள் வணிகத்தில் முடிவெடுப்பது --------- **விரைவாக.**
28. தனியாள் வணிகத்தில் -------- **வியாபார இரகசியங்களைக் காக்க இயலும்.**
29. தனிநபர் கட்டுப்பாடுதான் உலகிலேயே சிறந்தது என்றவர் --------- **வில்லியம் R பேசட்.**
30. தொழிலமைப்புகளின் மிகப் பழமையான வடிவம் ---------- **தனியாள் வணிகமுறை.**
31. அரசு தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது --------**துறைவாரி அமைப்பு.**
32. ஒரு தனியாள் வணிக அமைப்பிற்கு சொந்தக்காரராக இருப்பவர் **தனிநபர்** ஆவார்.

33. ஒரு தனியாள் வணிக உரிமையாளரின் **மேலாண்மை** திறமைக்கு எல்லை உண்டு.

34. **தனியாள் வணிகம்** அமைக்க அதிக சட்டமுறைகள் இல்லை

35. கூட்டாண்மையின் அடிப்படைக்கூறு ---------------- **பூரண நல்ல நம்பிக்கை.**

36. கூட்டாண்மையில் தோன்றும் உறவு முறை ----------------**முதல்வர் மற்றும் முகவர்.**

37. கூட்டாண்மை நிறுவனத்தில் இலாப - நட்டம் **ஒப்புக்கொண்ட** விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

38. **கூட்டாண்மை** முகமைக் கோட்பாட்டின் விரிவாக்கம் என்று வர்ணிக்கப்படுகிறது.

39. கூட்டாண்மையில் உள்ள கூட்டாளிகளை ஒட்டு மொத்தமாக **நிறுவனம்** என்றழைக்கின்றோம்.

40. இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு **வரையறா பொறுப்பு**.

41. வங்கித் தொழில் அல்லாத பிற தொழிலுக்கு அதிக பட்ச எண்ணிக்கை 20 பேர்.

42. நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளியை உறங்கும் **கூட்டாளி / உழையாக்கூட்டாளி** என்றழைக்கப்படுகிறது.

43. கூட்டாளிகளுக்கு ஒரு உடன்பாட்டின்படி உரிமைகள் வழங்கப்பட்டிருப்பின் அது **வெளிப்படை ஆணையுரிமை** ஆகும்.

44. இளவர் என்பவர் 18 வயது பூர்த்தி அடையாதவர்.

45. **கூட்டாண்மை கலைப்பு** என்பது கூட்டாளின் உடன்பாடு முடிவுக்கு வருவதாகும்.

46. **நிறுவனக் கலைப்பு** என்பது கூட்டாளிகளிக்கிடையே நிலவும் உறவு முறிந்து விடுதலாகும்.

47. தனி வரையறு நிறுமம் ஒன்று **தொழில் கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன்** தொடங்கப்படும்.

48. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை - A என்பது ------- **நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி.**

49. ஒரு நிறுமத்தின் செயல்பாட்டு எல்லையை உணர்த்தும் ஆவணம் ------- **நிறுமத்தின் அமைப்ப முறையேடு.**

50. நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுவது ---------**சட்டமுறை நிறுமம்.**

51. முன்னுரிமைப் பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது -------**பங்காதாயம் பெறுவதிலும் நிறுமம் கலைப்பின்போது பங்கு முதலைத் திரும்ப பெறுவதிலும்.**

52. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் ------- **கடனாளர்கள்**

53. எப்பொழுது கடனீட்டுப் பத்திரதாரர்கள் வட்டி பெறும் உரிமை பெற்றுள்ளனர் ?---- **நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும்.**

---

54. பொது வரையறை நிறுமத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை----7 பேர்

55. பொது வரையறை நிறுமத்தில் அதிகளவு இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ---வரையறு இல்லை

56. ஒரு பொது வரையறு நிறும பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய உறுப்பினர் குறைவெண் 5 ஆகும்

57. தனியாள் வணிகம் துவங்க **ஒரு நபர்** மட்டும் தேவை.

58. தனிவரையறு நிறுமத்தில் குறைந்தளவு உறுப்பினரின் எண்ணிக்கை ----- 2

59. தனிவரையறு நிறுமத்தில் குறைந்தது **இரண்டு** இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.

60. 15 எண்ணிக்கைக்கு மிகாமல் பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பதவி வகிக்கலாம்.

61. இரு ஆண்டுப் பொதுக் கூட்டங்களுக்கு உள்ள கால இடைவெளி 15 மாதங்களுக்கு மிகக் கூடாது.

62. ஆண்டுப் பொதுக் கூட்ட அறிக்கையை அனைத்து உறுப்பினர்களுக்கும் கூட்ட நாளுக்கு குறைந்தது 21 நாட்களுக்கு முன்னராவது தரவேண்டும்.

63. சட்டமுறை அறிக்கையை நிறும உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கூட்ட நாளுக்கு குறைந்தது 21 நாட்களுக்கு முன்னராவது அனுப்பி வைக்கவேண்டும்.

64. இந்தியாவிலுள்ள ஏற்பிசை பெற்ற பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை 21.

65. கூட்டுறவு சங்கத்தில் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை --- 25 பேர்

66. கூட்டுறவு சங்கத்தில் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ---- வறையறு இல்லை.

---

67. தகுதிப் பங்குகளின் மொத்த இயல் மதிப்பு ரூ. 5,000 மிகக் கூடாது .

68. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் மதிப்பு ரூ. . 5,000.

69. தகுதிபெற்ற நிறுமச் செயலரை நியமித்தல் கீழ்கண்ட எந்நிறுமத்திற்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது ?--- செலுத்தப் பெற்ற பங்குமுதல் ரூ.50,00,000 க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்.

---

## நான்கு மதிப்பெண் வடிவில் -- ஒரு மதிப்பெண் வினாக்கள் :

70. தனக்கென்று தனியானதொரு செயல்முறை விதிகளை வகுத்துக் கொள்ளத் தேவையில்லாத நிறுமம் **பொது நிறுமம்** ஆகும்.

71. ஒரு நிறுமத்தில் செலுத்தப் பெற்ற பங்கு முதலில் 51% க்கு குறையாமல், ஒரு மாநில அரசு வைத்திருக்குமானால் அது **அரசு** நிறுமமாகும்.

72. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள் **குவி முன்னுரிமை பங்குகள்** என அழைக்கப்படுகின்றன.

73. ஒரு பொது வரையறு நிறுமம் தனது கடனீட்டுப் பத்திரங்களை / பங்குகளை வாங்குமாறு பொது மக்களிடம் அழைப்புவிடும் விளம்பரத்திற்குப் பெயர் **தகவல் அறிக்கை** எனப்படும்.

74. வழக்கமாகப் பெறக்கூடிய நிலையான வீதப் பங்காதாயத்துடன், கூடுதல் பங்காதாயம் பெற உரிமையுள்ள பங்குகள் **எஞ்சிய இலாபத்தில் பங்குபெறும் முன்னுரிமை பங்குகள்** என அழைக்கப்படும்.

75. செயல் முறை விதிகளில் மாற்றம் செய்ய **சிறப்புத்** தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

76. ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க, வருகை தரவேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கை **குறைவெண்** எனப்படும்.

77. பங்கு மாற்றகத்தின் அலுவல் பட்டியலில் பங்குகளின் பெயரை இடம்பெறச் செய்வது **பட்டியலிடுதல்** எனப்படும்.

78. ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் தொழில்களை அரசு ஏற்று நடத்தினால் அதனை **நாட்டுடைமையாக்கம்** என்று பெயர்.

79. பங்குநர் ஒருவருக்குப் பதிலாக கூட்டத்தில் கலந்து கொள்ள நியமிக்கப்படும் நபர் **பகராள்** என அழைக்கப்பெறுகிறார்.

80. கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே **நிகழ்ச்சி நிரல்** என்று கூறப்படுகிறது.

81. **இணைவினை** என்பது ஒரு குறிப்பிட்ட வணிகச் செயல் அல்லது வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துக் கொடுக்க உருவாக்கப்பட்ட ஒரு தற்காலிகக் கூட்டமாகும்.

82. சிறு முதலீட்டாளர்கள் தம் சிறுசேமிப்பைப் பெரிய நிறுமங்களில் முதலீடு செய்ய **பரஸ்பர நிதிகள்** உதவுகின்றன.

83. ஒரு நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் -------- நிறுமச் செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிடப்படுவதால் நியமிக்கப்படுகின்றனர்.

84. ஒரு இயக்குநர் ---மேற்சொன்ன அனைத்துமாகச் செயலாற்றுகிறார். ( நிறுமத்தின் முகவராக, நிறுமத்தின் பொறுப்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையாராக,நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக )

85. கீழ்கண்ட நிறுமங்களுள் எது சட்டமுறைக் கூட்டத்தை கூட்ட வேண்டும் ?---------- பொதுவரையறை நிறுமங்கள்.

86. இயக்குநர்,நிறுமத்தின் <u>முகவராகவும்</u> பொறுப்புறுதியாண்மையராகவும்,அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.

87. பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான <u>உரிமையாளர்கள்.</u>

88. நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக <u>செயல்முறை விதிகளில்</u> பெயரிடப்பட்டிருப்பர்.

89. பொதுவாக தணிக்கையர் ஆண்டுப் <u>பொது கூட்டத்தில்</u> நியமிக்கப்பட்டு ஊதியமும் நிர்ணயிக்கப்படும்.

90. புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை ------ பொது விடுப்புகள் / பொது வெளியீடு.

91. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது -------- **நிதிப் பத்திரங்கள்.**

92. ஒரு கூட்டுறவுச் சிறப்பங்காடி அளிப்பது ------ **சரக்குகள்.**

93. பங்கு மாற்றகங்கள் இவற்றின் வணிகத்தை அனுமதிக்கிறது ------ பட்டியலிடப்பட்ட பத்திரங்கள்.

94. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர் ---- **காளை** ( காளை நமக்கு நன்மை செய்கிறது )

95. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர் ---- **கரடி.**

96. எச்சரிக்கையான ஊக வணிகர் -------- **கலைமான்**.

97. கலைமான் ஊக வணிகர் <u>முனைம வேட்டையாளர்</u> எனவும் அழைக்கப்படுவர்.

98. பங்கு மாற்றகம் இதற்கான ஒரு இடமாகும் --------- நிதிப் பத்திரங்களை வாங்கி விற்பது.

99. பங்குகள் <u>உடைமை</u> உரிமையைக் குறிக்கும்.

100. பத்திரங்கள் என்பது <u>உடைமை</u> உரிமையைக் குறிக்கும்.

101. கடன் பத்திரங்கள் <u>கடனீட்டு</u> உரிமையைக் குறிக்கும்.

102. <u>தரகர்கள் , ஒப்புறுதியர்</u> போன்றவர்கள் புதிய விடுப்புகளை வெளியிட நிறுமங்களுக்கு உதவுவார்கள்.

103. பங்குகள் ஒதுக்கீடு செய்தப்பின் , ஒதுக்கீட்டாளர் நிறுமத்தின் <u>பங்குதாரர் , உறுப்பினர்</u> ஆகிறார்.

104. குறுமப்பங்கொப்பம், வெளியிடப்படும் பங்கு முதலில் <u>90</u> சதவீதமாக நிர்ணயிக்கப்படுகின்றது.

105. தவலறிக்கை யில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும் ---------- 90 **நாட்கள்.**

106. இரண்டாம் நிலைச் சந்தையின் வாணிப அளவு <u>முதன்மைச் சந்தை</u> யைப் பொறுத்து இருக்கும்.

107. தீர்வுப் பத்திரங்கள் <u>முன்னோக்கிய பட்டியல்</u> எனவும் அழைக்கப்படும்.

108. ஆயத்தக் கொடுப்பு ஒப்பந்தங்கள் <u>அவ்விடத்து ஒப்பந்தம்</u> எனவும் அழைக்கப்படும்.

109. <u>செபி</u> இந்தியப் பங்கு சந்தையை ஒழுங்குபடுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மேற்பார்வை அமைப்பாகும்.

110. போல்ட் என்பது <u>மும்பை</u> பங்கு சந்தையில் உபயோகத்தில் உள்ள ஒரு நேரடி வணிக முறையாகும்.

111. பங்காதாயம் கூட்டுறவில் <u>ஆதரவின்</u> அடிப்படையில் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

112. கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களின் பங்குகள் ------ திருப்பி செலுத்தக் கூடியது.

113. முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு----- இங்கிலாந்து.

114. சிறுபான்மையினர் நலத்தை பாதுகாக்கும் தொழிலமைப்பு ---- கூட்டுறவு சங்கங்கள்.

115. கோப்பரெரி என்ற இலத்தின் மொழியின் பொருள் **இணைந்து பணியாற்றுதல்**.

116. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை **இராபர்ட் ஓவன்.**

117. 14 விழுக்காடு மட்டுமே பங்காதாயமாக பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

118. கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண்மை **மக்களாட்சித் தன்மை** கொண்டது.

119. சிறப்பங்காடிகள் எனப்படுவது பேரளவில் செயல்படும் **சில்லரை வணிக** அமைப்பு.

120. பொதுக் கழகத்தின் நிருவாகம் இதைப் பெற்றிக்கிறது ---------- **வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்**.

121. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாகக் கருதப்படும் வடிவமைப்பு --------- **பொதுக் கழகமாகும்**.

122. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம் --------- **அரசு நிறுமம்.**

123. அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய குறைந்த பட்சப் பங்கு முதல் --------- 51 %.

124. அரசுத் தொழில்களின் முதன்மையான நோக்கம் **பொதுச்சேவை அல்லது பொது நலன்.**

125. இராணுவப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற தொழிலமைப்பு **துறைவாரி அமைப்பு** அமைப்பேயாகும்.

126. **பொதுத்துறை** ஒரு சிலரிடம் பொருளாதார வலிமை செறிவதைத் தடை செய்கிறது.

127. **தனியார்** துறையில் நுகர்வோரும் , பணியாளர்களும் சுரண்டப்படுவது பரவலாகக் காணப்படும்.

128. பொதுக் கழகத்தை அரசால் நியமிக்கப்பட்ட **இயக்குநரவை** நிருவாகம் செய்கின்றது.

129. கீழ்கண்ட சூழ்நிலைகளுள் எப்பொழுது கடனீட்டுப் பத்திரதாரர்கள் வட்டி பெறும் உரிமை பெற்றுள்ளனர் ? ----------- **நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும்**.

130. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கீழ்கண்டவற்றுள் எந்நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்படமாட்டாது ? --------- **கடனீட்டுப் பத்திர வெளியீடு.**

131. உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தை அமைப்பது --------- **சிறு தொழில் உற்பத்தியாளர்கள்.**

132. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பொறுப்பு ------------ **வரையறுக்கப்பட்டது.**

133. பொது வரையறு நிறுமத்தில் ஒட்டு மொத்த மேலாண்ம ஊதியம் ---------- **நிகர இலாபத்தில் 11 விழுக்காடு**

134. தனக்கென்று தனியானதொரு செயல்முறை விதிகளை வகுத்துக் கொள்ளத் தேவையில்லாத நிறுமம் **பொது** நிறுமமாகும்.

135. இது புதிய நிறுமங்களின் முதல் விடுப்புகளை வெளியிடும் ------------ **முதன்மைச் சந்தை.**

136. குறைந்த மூலதனமே தேவைப்படும் அடுமனைகள் ( Bakeries ) போன்ற தொழில்கள் **தனி வணிகத்திற்கு** ஏற்றத் தொழில்கள் ஆகும்.

137. பொதுக் கழகங்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசின் **தனிச்சட்டத்தால்** உருவாக்கப்படுகின்றன.

138. பேரளவு நிறுவனங்கள் **கூட்டுப்பங்கு நிறுமம்** அமைப்பில் நிறுவப்படுகிறன.

139. ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒவ்வொருவருக்காக என்பது **கூட்டுறவு** -ன் குறிக்கோளாகும்.


B. பாலாஜி,
முதுகலை ஆசிரியர் ( வணிகவியல் ),
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
பரந்தூர் - 631 552.
காஞ்சிபுரம் மாவட்டம்.
கைபேசி எண் :9629647613